# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.54/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தேவராஜ் | மதம் | : இந்து |
| த/பெ | : நரசிம்மன் | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : அலமேலுமங்காபுரம் பேட்டை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**01.08.2025**

**பி.வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து காளப்ப நாயுடுக்கு சொந்தம் என்று சொல்லியிருப்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1967ல் நான் பிறக்கவேயில்லை என்பதால் எனக்கு அந்த வருடம் பத்திரத்தை பற்றி தெரியாது என்றால் சரிதான். 1967 பத்திரத்தில் முனுசாமி நாயுடு என்ன விஸ்தீரணத்திற்கு என்ன என்ன புல எண்களில் சொத்து வாங்கினார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். 1967ல் இருந்து 6ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்பதை காட்ட அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாபு நாயுடு, பாப்பம்மாள், நாகராஜ், வேணுகோபால் எந்த தேதியில் ராதாகிருஷ்ணனிடம் சொத்தை வாங்கிகொள்ள கேட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. 06.03.2002ம் தேதியிட்ட ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்று தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். 6ம் பிரதிவாதிக்கு நான் வேண்டப்பட்டவர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி

சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)